பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

*05 09 2024      7 15*
*வியாழக்கிழமை      காலை*

*<u>தலைப்புச் செய்திகள்-</u>*

- ஆசிரியர் தினத்தையொட்டி தேசிய நல்லாசிரியர் விருதுகளை குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று வழங்குகிறார்.
- ஹரியானா மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கலும், ஜம்மு-கஷ்மீரில் மூன்றாவது மற்றும் இறுதிக்கட்ட தேர்தலுக்கான வேட்புமன தாக்கலும் இன்று தொடங்குகிறது.
- தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்ட ஓய்வூதியத்தை வரும் ஜனவரி மாதத்திலிருந்து எந்தவொரு வங்கியின் கிளையிலிருந்தும் பயனாளிகள் பெற்றுக்கொள்ளலாம் என மத்திய அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.
- ஆந்திர மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை மத்திய குழு இன்று ஆய்வு செய்கிறது.
- பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் ஐந்து தங்கம் உட்பட 24 பதக்கங்களுடன் இந்தியா 13-வது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

**[]<<<>>>[]**

ஆசிரியர் தினம் இன்று நாடு முழுவதும் கொண்டாடப்படுகிறது.

முன்னாள் குடியரசுத் தலைவர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணனின் பிறந்த நாள் ஆசிரியர் தினமாக கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி தலைவர்கள் ஆசிரியர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துள்ளனர்.

ஆசிரியர் தினத்தையொட்டி, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு புதுதில்லியில் இன்று நடைபெறும் நிகழ்ச்சியில் தேசிய நல்லாசிரியர் விருதுகளை வழங்குகிறார்.

82 ஆசிரியர்கள் இந்த விருதினை பெற்றுக் கொள்கின்றனர்.,

கல்விப் பணியில் சிறந்து விளங்கும் ஆசிரியர்களை கௌரவிக்கும் வகையில் தேசிய நல்லாசிரியர் விருதுகளை மத்திய கல்வி அமைச்சகம் வழங்கி வருகிறது.

இந்த ஆண்டு பள்ளிக் கல்வித் துறையில் 50 ஆசிரியர்களுக்கும், உயர்கல்வித் துறை மற்றும் திறன் மேம்பட்டுத்துறையில் தலா 16 ஆசிரியர்களுக்கும் இந்த விருது வழங்கப்படவுள்ளது.

தமிழகத்தில் பள்ளிக்கல்வித் துறையைச் சேர்ந்த இரண்டு ஆசிரியர்களும், உயர்கல்வியில் இரண்டு ஆசிரியர்களும் இன்றைய நிகழ்ச்சியில் விருதினை பெறுகின்றனர்.

[]<<<>>>[]

சிங்கப்பூர் சென்றுள்ள பிரதமர் திரு நரேந்திரமோடி இன்று அந்நாட்டு அதிபர் மற்றும் பிரதமரை சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

அந்நாட்டு பிரதமர் திரு லாரன்ஸ் வாங்க-வுடனான சந்திப்பின்போது மண்டல மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து பிரதமர் ஆலோசனை நடத்தவுள்ளார்.

இன்று பிற்பகல் அதிபர் திரு தர்மன் சண்முகரத்தினத்தையும் பிரதமர் சந்தித்து பேச்சுக்கள் நடத்தவுள்ளார்.

அங்குள்ள தொழில் துறையினருடனும் திரு நரேந்திமோடி கலந்துரையாடவுள்ளார்.

[]<<<>>>[]

ஆந்திராவில் ஏற்பட்டுள்ள வெள்ள நிலைமை குறித்து மத்திய அரசு உன்னிப்பாக கண்காணித்து வருவதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஆந்திராவில் வெள்ள நிலைமையை ஆய்வு செய்ய உள்துறை அமைச்சகத்தின் பேரிடர் மேலாண்மைக்கான கூடுதல் செயலாளர் தலைமையில் மத்திய குழு இன்று அங்கு செல்ல உள்ளதாக தெரிவித்துள்ளார்.

இந்தக் குழு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்து, உடனடி நிவாரணத்திற்கான பரிந்துரைகளை வழங்கும் என்று அவர் கூறியுள்ளார்.

மத்திய குழு இன்று வெள்ளத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட கிருஷ்ணா, என் டி ஆர், குண்டூர் உள்ளிட்ட பகுதிகளை ஆய்வு செய்யவுள்ளது.

மத்திய உள்துறை அமைச்சகத்தின் பேரிடர் மேலாண்மைக்கான கூடுதல் செயலாளர் திரு சஞ்சீவ் குமார் ஜிண்டால் தலைமையிலான இந்த குழு, வெள்ளச் சேதங்களை ஆய்வு செய்து மத்திய அரசுக்கு அறிக்கை அளிக்கவுள்ளது.

இதனிடையே ஆந்திராவில் மீட்புப்பணயில் தேசிய பேரிடர் மீட்பு படையைச் சேர்ந்த 26 குழுக்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இந்த குழுக்கள் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை முழுவீச்சில் மேற்கொண்டு வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**[]<<<>>>[]**

தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி திட்ட ஓய்வூதியத்தை அடுத்த ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து எந்தவொரு வங்கியின், எந்த ஒரு கிளையிலிருந்தும் பயனாளிகள் பெற்றுக்கொள்ளலாம் என மத்திய தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் வருங்கால வைப்பு நிதி அறக்கட்டளையின் மத்திக் குழுக் கூட்டத்திற்குப் பின் பேசிய அவர், ஒருங்கிணைந்த பென்ஷன் விநியோக கட்டமைப்பு இதற்கான ஒப்புதலை அளித்துள்ளதாக கூறினார்.

இதன்மூலம் 78 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி ஓய்வூதியதாரர்கள் பயன்பெறுவர் என்றும் அவர் தெரிவித்தார்.

**'EPF '** ஓய்வூதியதாரர்கள் காலதாமதமின்றி வங்கிக் கணக்குகளில் தங்களது ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்ள வழி ஏற்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வருங்கால வைப்பு நிதி அமைப்பின் நவீனமயமாக்கலில் இது ஒரு மைல் கல் எனவும், இதன்மூலம் ஓய்வூதியதாரர்களின் நீண்டகால பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

2030-ஆம் ஆண்டுக்குள் ஜவுளித்துறையில் மூன்றரை கோடி வேலைவாய்ப்புக்கள் உருவாக்கப்படும் என அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் பாரத் டெக்ஸ் கண்காட்சி குறித்த அறிமுக நிகழ்ச்சியில் பேசிய அவர், இத்துறை அடுத்த ஆறு ஆண்டுகளில் 350 பில்லியன் டாலர் அளவுக்கு வளர்ச்சியை எட்டும் என்று தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஹரியானா மாநில சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் இன்று தொடங்குகிறது.

வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய வரும் 12-ம் தேதி கடைசி நாளாகும்.

ஹரியானாவில் மொத்தமுள்ள 90 தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக அடுத்த மாதம் 5-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இதனிடையே ஜம்மு-காஷ்மீரில் மூன்றாவது மற்றும் இறுதிக்கட்ட வாக்குப் பதிவக்கான வேட்பு மனு தாக்கல் இன்று தொடங்குகிறது.

மூன்றாவது கட்டமாக அங்கு 40 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கு அடுத்த மாதம் ஒன்றாம் தேதி தேர்தல் நடைபெறவுள்ளது.

ஹரியானா மற்றும் ஜம்மு காஷ்மீரில் பதிவாகும் வாக்குகள் அடுத்த மாதம் 8-ம் தேதி எண்ணப்படுகின்றன.

இதனிடையே ஜம்மு காஷ்மீரில் இரண்டாம் கட்ட வாக்குப் பதிவு நடைபெறும் 26 தொகுதிகளில் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்ய இன்று கடைசி நாளாகும்.

இந்நிலையில் ஜம்மு காஷ்மீரில் அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் தீவிரம் அடைந்து வருகிறது.

அனந்த்நாக் மாவட்டத்தில் நேற்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல் காந்தி, மக்களின் விருப்பங்களை நிறைவேற்றும் வகையில் காங்கிரஸ் செயல்படுவதாக கூறினார்.

ஸ்ரீநகரில் செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி பொதுச் செயலாளரும், ஜம்மு காஷ்மீர் தேர்தல் பொறுப்பாளருமான திரு ராம்மாதவ், ஜம்மு காஷ்மீரில் அமைதி, வளர்ச்சி மற்றும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதே பிஜேபி-யின் நோக்கம் என்று கூறினார்.

இதனிடையே ஹரியானா சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிடும் 67 வேட்பாளர்கள் அடங்கிய முதல் வேட்பாளர் பட்டியலை பிஜேபி வெளியிட்டுள்ளது.

இதன்படி முதலமைச்சர் திரு நயப் சிங் சைனி லாட்வா தொகுதியிலும், சட்டப் பேரவைத் தலைவர் திரு கியான் சந்த் குப்தா பஞ்ச்குலா தொகுதியிலும் போட்டியிடுகின்றனர்.

இந்த பட்டியலில் 8 பெண் வேட்பாளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

[]<<<>>>[]

ராஜஸ்தான் மாநிலத்தில் காவலர் பணியிடங்களில் பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்க அந்த மாநில அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.

முதலமைச்சர் திரு பஜன்லால் சர்மா தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்துக்குப் பின் செய்தியாளர்களிடம் பேசிய துணை முதலமைச்சர் திரு பிரேம் சந்த் பைரவா, அமைச்சரவையின் இந்த முடிவு காரணமாக மாநிலத்தில் பெண்களுக்கு அதிக வேலை வாய்ப்புகள் உருவாகும் என்றார்.

ராஜஸ்தான் காவல்துறையில் மகளிரின் பிரதிநிதித்துவம் அதிகரிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

அசாம் மாநிலத்தில் இணையதள வர்த்தகம் மூலம் இரண்டாயிரத்து 200 கோடி ரூபாய் அளவிற்கு மோசடியில் ஈடுபட்ட 68 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு ஹிமந்தா பிஸ்வா சர்மா கூறியுள்ளார்.

ஹவுஹாத்தியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இணையதள வர்த்தக மோசடி தொடர்பான விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்றார்.

பணத்தை இரட்டிப்பாக்கித் தருவதாக கூறி மோசடி செய்யும் நபர்களை நம்பி ஏமாற வேண்டாம் என்றும் திரு ஹிமந்த பிஸ்வா சர்மா கேட்டுக் கொண்டார்.

[]<<<>>>[]

நாகாலாந்தில் பெய்த கனமழை காரணமாக கோஹிமா - திமாபூர் தேசிய நெடுஞ்சாலையில் நேரிட்ட நிலச்சரிவில் ஆறு பேர் உயிரிழந்தனர்.

அப்பகுதியில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு நெய்பியூ ரியோ கூறியுள்ளார்.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா நான்கு லட்சம் ரூபாய் வழங்கப்படும் என துணை முதலமைச்சர் திரு டி ஆர் ஜெலியாங் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

[]<<<>>>[]

இலங்கையில் அதிபர் தேர்தலுக்கான தபால் வாக்கு நேற்று தொடங்கியது.

ஏழு லட்சத்து 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட அரசு அதிகாரிகள் தபால் மூலம் வாக்களிக்க அந்நாட்டுத் தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது.

இந்த தபால் வாக்குகளை நாளை வரை செலுத்தலாம் என தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இலங்கையில் அதிபர் தேர்தல் வரும் 21-ம் தேதி நடைபெறவுள்ளது.

[]<<<>>>[]

யுக்ரைனின் மேற்கு நகரமான **Lviv**-யில் ரஷ்யா நடத்திய ட்ரோன் மற்றும் ஏவுகணைத் தாக்குதலில் ஏழு பேர் உயிரிழந்தனர். 60-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதலில் 50-க்கும் மேற்பட்ட கட்டடங்கள் சேதமடைந்துள்ளதாக லிவிவ் நகர மேயர் திரு ஆண்ட்ரி சடோவி தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

பாரிஸ் பாராலிம்பிக் போட்டியில் இதுவரை 24 பதக்கங்களை வென்று இந்தியா 13-வது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

ஐந்து தங்கம், ஒன்பது வெள்ளி, 10 வெண்கலப் பதக்கங்களை இந்தியா வென்றுள்ளது.

பாரிஸ் பாராலிம்பிக் வில்வித்தைப் போட்டியில் இந்திய வீரர் ஹர்விந்தர் சிங் தங்கப் பதக்கம் வென்று வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

பதக்கம் வென்ற ஹர்விந்தருக்கு பிரதமர் திரு நரேந்திரமோடி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

பாராலிம்பிக் போட்டியில் இன்று நடைபெறும் 50 மீட்டர் துப்பாக்கி சுடும் போட்டி, வில்வித்தை கலப்புக் குழுப் போட்டி, 65 கிலோ வலுதூக்கும் போட்டி ஆகியவற்றில் இந்திய வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

[]<<<>>>[]

ஜெர்மனியில் நடைபெறும் காது கேளாதோறுக்கான உலக துப்பாக்கி சுடும் சாம்பியன் போட்டியின் மகளிர் 25 மீட்டர் பிரிவில் இந்தியாவின் **Pranjali dhumal** வெண்கலப்பதக்கம் வென்றார்.

**[]<<<>>>[]**

எட்டு அரசு துறைகளுக்கு இடையேயான நான்காவது தேசிய ஆடவர் ஹாக்கிப் போட்டி புனேயில் இன்று தொடங்குகிறது.

இப்போட்டி வரும் 15-ஆம் தேதி வரை நடைபெறுகிறது.

**[]<<<>>>[]**